1972 சனவரி 31]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, எம்போரியங்கள் மூலம் இந்த கைவினைப் பொருள்களுக்கு உதவி செய்வதுபற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்பொழுது கிராமத்திலேயிருக்கும் இம்மாதிரி தொழில் செய்பவர்கள் ஆங்காங்குள்ள கூட்டுறவுச்சங்கங்களில் கடன்பெற முடியவில்லை. அதற்குக் காரணம் அது விவசாயிகளுக்கு மட்டும் கொடுக்கிறது. இவர்களுக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கடன் அளித்தால் அவர்கள் செய்யும் பொருள்களைச் செய்து பிழைப்புக்கு வழி ஏற்படும். அதற்கு ஆவன அமைச்சரவர்கள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் யாரோ சொன்ன தகவலைத் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில்தான் இப்படிப்பட்ட கைவினை இயக்குநர் கூட்டுறவுச் சங்கங்களை வைத்து நடத்துகிறார்கள். இதற்காகப் பணம் கொடுக்க, நம்முடைய ஸ்டேட் கோவாப்பரேடிவ் வங்கியின்மூலம் கடன் கொடுக்கப்பட வேண்டுமென்ற புதிய ஆணை ரிசர்வ் வங்கியின் ஆலோசனையின் பேரில் பிறப்பித்திருக்கிறோம். அதற்கு முன் இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பேங்குகள் நம் தமிழகத்தில் செயல்பட்டு ஏற்கனவே இருந்து வருகின்றன.

வண்ணப்புடவைகள்

* 188 வினா—திரு. மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலர் சேலைகளை கைத்தறிக்கே ஒதுக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எப்பொழுது அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) கலர் நூலை உபயோகப்படுத்தி கோடு அல்லது கட்டம் போட்ட ரகமும் அல்லது 2½ அங்குலத்துக்கும் அதிகமான அகலக் கரை கொண்ட கலர் சேலைகளும் கைத்தறிக்கு ஒதுக்கி பம்பாய் துணிநூல் ஆணையர் அவர்களால் பஞ்சு துணி கட்டுப்பாடு சட்டம், 1948-ன் கீழ் உத்திரவிடப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கலர்ப் புடவைகளை இம்மாதிரி கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று சொன்னதற்குப் பின்னும் விசைத் தறியிலும், இங்கே மில்களிலும் கூட அம்மாதிரி உற்பத்தி செய்யப்படுவதைத் தடுக்க மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசாங்கத்தின் ஆணையின்படி பொதுவாக கலர்ச் சேலைகளைத் தடுப்பது என்று இல்லாமல் அதற்கு ஒரு விதி போட்டு 2½ அங்குல பார்டர் என்று போட்டிருக்கிறார்கள், கோடு அல்லது கட்டம் போட்ட ரகம் என்ற வார்த்தைகளைப் புகுத்தியிருக்கிறார்கள். பவர்லூம்ஸைப் பொறுத்தவரை ஐந்து விசைத்தறிகளை வைத்திருப்பவர்களுக்குச் சலுகை என்று சொல்லி இருக்கிறார்கள். ஆணையைப் போட்டு விட்டு விதிவிலக்குகளும் ஏராளமாக இருக்கிற காரணத்தால் இது சரிவர இந்திய நாட்டிலே எங்கும் அமல் நடத்தப்படவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த ஆணை மீறப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய மாநிலத்தை மட்டும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்காமல்

எல்லா மாநிலங்களையும் சேர்த்து பொதுவான கொள்கையை மத்திய அரசாங்கம் கடைப்பிடிப்பதன் மூலம் இந்த ஆணையைத் திவிரமாக அமல் படுத்த முடியும்.

சென்னையில் இயங்கும் நீதிமன்றங்கள்

*189 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் நடமாடும் நீதிமன்றங்கள் தற்போது எத்தனை இயங்குகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னையில் நான்கு நடமாடும் நீதி மன்றங்கள் இயங்குகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : சென்னையிலே நடமாடும் நீதிமன்றங்கள் இருந்து, குற்றவாளிகளை உடனடியாக விசாரித்து தண்டனை கொடுக்கிறார்கள். அதுபோல் வட்டங்களில் குற்றம் செய்பவர்களை உடனுக்குடன் தண்டிக்க வாய்ப்பு ஏற்படும் வகையில் நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடனுக்குடன் தண்டனை கொடுத்தால் நல்லது அல்ல. விசாரித்துத்தான் தண்டனை கொடுக்க வேண்டும். அதிக மான வழக்குகள் பெரிய நகரங்களில் வருவதால் அந்த நகரங்களுக்கு மட்டும் இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த நடமாடும் நீதிமன்றங்கள் சென்னையைத் தவிர வேறு எந்த நகரங்களில் இருக்கின்றன ? அப்படி வேறு நகரங்களில் இல்லையென்றால் மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற அதிக ஜனத் தொகையுடைய நகரங்களில் நடமாடும் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே சில நகரங்களுக்கு இந்தத் திட்டம் பரிசிலிக்கப்பட்டு வந்தது. அந்த விவரம் இல்லை. எந்தெந்தப் பெரிய நகரங்களில் இதுபோன்ற வழக்குகள் அதிகமாக வருகின்றனவோ அங்கெல்லாம் இந்த முறை பின்பற்றப்படும்.

Water in Buckingham Canal.

*190 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that waters flowing in the Buckingham Canal in Madras City is becoming red; and

(*b*) if so, whether any experiments have been conducted thereon ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். சில சமயங்களில் பக்கிங்ஹாம் கால்வாயில் மாநகராட்சி குழாய்கள்மூலம் கழிவு நீரை விடுவ தாலும், அக்கழிவு நீரிலும் மற்ற கழிவுப்பொருள்களிலும் மருந்து மற்றும் பல